## ரீல்ஸ் மோகத்தில்

# அரசுப் பள்ளியில் அமைச்சர் கீர்த்தனா ஆய்வு!

## தி.மு.க. ஐ.டி. விங் கண்டனம்!

சென்னை, ஜூலை 9-

ரீல்ஸ் மோகத்தில் அரசுப் பள்ளியில் ஆய்வு என்ற பெயரில் மாணவ, மாணவியரின் தன்னம்பிக்கையை கேலி செய்த அமைச்சர் கீர்த்தனாவின் செயலுக்கு தி.மு.க. கண்டனம் தெரிவித்துள்ளது.

தி.மு.க. தகவல் தொழில்நுட்ப அணி வெளியிட்டுள்ள சமூக வலைதளப்பதிவில், அரசுப்பள்ளி மாணவியின் தன்னம்பிக்கையைத் தனது விளம்பர ரீல்ஸ்க்காக கேமரா முன்பு கேலி செய்து சங்கடப்படுத்திய அமைச்சர் கீர்த்தனாவின் செயலை வன்மையாக கண்டித்துள்ளது.

சொந்த அனுபவங்களை மறந்த அமைச்சரின் இந்த அதிகாரம் மிக்க மேட்டிமைத்தனம், த.வெ.க.வின் விளம்பர வெறிக்காக எவரையும் பலி குடுக்க தயங்க மாட்டோம் என்ற சிந்தனையை அப்பட்டமாகக் காட்டுகிறது என தி.மு.க. ஐ.டி. விங் சாடியுள்ளது.

தேர்தலுக்கு முன்பும் சரி, தற்போதும் சரி, தங்கள் விளம்பர வெறிக்காகப் பிஞ்சு குழந்தைகளைப் பயன்படுத்தும் இத்தகைய பொறுப்பற்ற செயலைத் த.வெ.க.வும் அதன் தலைவரும் கைவிட வேண்டும் என்றும், பதவி உயர்ந்தால் மட்டும் போதாது; த.வெ.க. தலைவருக்கும் அவருடன் இருப்பவர்களுக்கும் மனமும் உயர்ந்திருக்க வேண்டும் என்றும் தி.மு.க. ஐ.டி. விங் கண்டனம் தெரிவித்துள்ளது.

**நெட்டிசன்கள் கண்டனம்!**

மேலும் தனது ஆங்கிலப் புலமையைக் காட்ட, பள்ளி மாணவர்களின் தன்னம்பிக்கையை உடைக்கும் வகையில் செயல்பட்ட அமைச்சர் கீர்த்தனாவுக்கு கண்டனங்கள் வலுத்து வருகின்றன.

அமைச்சர் கீர்த்தனா நேர்காணலின் போது ஆங்கிலத்தில் பிழையோடு பேசிய வீடியோவை சுட்டிக் காட்டி, நெட்டிசன்கள் ஆங்கிலப்பாடம் எடுத்த வீடியோ சமூக வலைதளங்களில் வைரலாகி வருகிறது.

---

## திருவொற்றியூரில்

# வீடு கட்டுபவரிடம் பணம் கேட்ட த.வெ.க. நிர்வாகி!

சென்னை, ஜூலை 9 -

சென்னை திருவொற்றியூர் குப்பத்தில் புதிதாக வீடு கட்டும் பெண்ணிடம் பணம் கேட்டு மிரட்டும் த.வெ.க. நிர்வாகி. ரூ.50,000 கொடுக்காவிட்டால் வீடு கட்ட விடமாட்டேன் என த.வெ.க. நிர்வாகி மிரட்டுவதாக புகார் அளிக்கப்பட்டுள்ளது.

தவெக நிர்வாகி ராகுல் மீது நடவடிக்கை எடுக்க வலியுறுத்தி காவல் நிலையத்தில் பெண் ஒருவர் புகார் அளித்துள்ளார்.

---

## சமூக நீதிப் போராளி ‘திராவிடமணி’

# இரட்டைமலை சீனிவாசன் பிறந்த நாள்!



## கனிமொழி கருணாநிதி எம்.பி. வாழ்த்துச் செய்தி!



**சென்னை, ஜூலை 9 - சமூக நீதிப் போராளி இரட்டை மலை சீனிவாசன் அவர்களின் பிறந்த நாளையொட்டி, கழக துணைப் பொதுச் செயலாளர்- நாடாளுமன்ற கழகக் குழுத் தலைவர் கனிமொழி கருணாநிதி விடுத்துள்ள சமூக வலைதளப் பதிவு வருமாறு:**

ஒடுக்கப்பட்ட மக்களின் உரிமைகளுக்காக ஓயாது போராடிய சமூக நீதிப் போராளி ‘திராவிடமணி’ இரட்டைமலை சீனிவாசன் அவர்களின் பிறந்த நாளான இன்று, அவரது மக்கள் பணிகளை நினைவு கூர்ந்திடுவோம்.

சாதிய ஏற்றத்தாழ்வுகளற்ற சமூகத்தை உருவாக்கிட, அவர்வழியில் தொடர்ந்து உழைப்போம்.

இவ்வாறு கனிமொழி கருணாநிதி எம்.பி. தெரிவித்துள்ளார்.

---

## சமூகநீதிப் போராளி

# திவான் பகதூர் திராவிட மணி - இரட்டை மலை சீனிவாசன் பிறந்தநாள்!

## தி.மு.க. சார்பில் துணை மேயர் மு.மகேஷ்குமார் மலர் மாலை அணிவித்து மரியாதை!

சென்னை, ஜூலை 9 -

சமூகநீதிப் போராளி - திவான் பகதூர் திராவிட மணி, இரட்டைமலை சீனிவாசன் அவர்களின் பிறந்த நாளினை முன்னிட்டு அன்னாரது திருவுருவச்சிலைக்கு தி.மு.க. சார்பில் தலைமைச் செயற்குழு உறுப்பினரும் - பெருநகர சென்னை மாநகர துணை மேயருமான மு. மகேஷ்குமார் மலர்மாலை அணிவித்து மரியாதை.

சமூகநீதிப் போராளி, திவான் பகதூர் திராவிட மணி இரட்டைமலை சீனிவாசன் அவர்களின் பிறந்த நாளான நேற்று முன்தினம் (07-07-2026), காந்தி மண்டப வளாகத்தில் உள்ள அன்னாரின் மணிமண்டபத்தில் அவரின் திருவுருவச் சிலைக்கு, திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில், தலைமைச் செயற்குழு உறுப்பினரும் - பெருநகர சென்னை மாநகராட்சி துணை மேயருமான மதிப்பிற்குரிய மு.மகேஷ்குமார் மாலை அணிவித்து மலர் தூவி மரியாதை செலுத்தினார்.



சமூகநீதிப் போராளி திவான் பகதூர் திராவிட மணி, இரட்டைமலை சீனிவாசன் அவர்களின் பிறந்தநாளினை முன்னிட்டு அன்னாரது திருவுருவச்சிலைக்கு தி.மு.க. சார்பில் தலைமைச் செயற்குழு உறுப்பினரும் – பெருநகர சென்னை மாநகர துணை மேயருமான மு.மகேஷ்குமார் மலர்மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்.

இந்நிகழ்வில் சைதை கிழக்குப் பகுதிச் செயலாளர், மண்டலக் குழுத் தலைவர் திரு. இரா.துரைராஜ், வட்டச் செயலாளர்கள் சைதை ஆ.வரதன், க.மணி, கோட்டூர் கோ.சண்முகம், மாவட்டப் பிரதிநிதிகள் எஸ்.ஜெ.சலாம், என்.பாபு, மாவட்டத் துணை அமைப்பாளர் எ.கெளதமன், வட்ட து.செயலாளர் எஸ். ராஜா, பொருளாளர் ஏ.கே. என். உதயகுமார், பகுதிப் பிரதிநிதிகள் சூரியன் பிரபு, ஆம்பூர் ரவி, கழக தாமு, அ.ரிஷிகுமார் உள்ளிட்ட கழகத்தினர் பலர் கலந்து கொண்டு மரியாதை செலுத்தினர்.

---

# கேரளா வயநாடு மாவட்டத்தின் பல இடங்களில் நிலச்சரிவு!

## 5 பேர் பலி – உடல்கள் மீட்பு!

வயநாடு, ஜூலை 9-

கேரளாவில் வயநாட்டில் பெய்த கனமழை காரண மாக ஏற்பட்ட நிலச்சரிவில் சிக்கி 5 பேர் பலியாகினர். மேலும் காணாமல் போன 5 தொழிலாளர்களை தேடும் பணி தீவிரமாக நடைபெற்று வருகிறது.



கேரளாவின் வயநாடு மாவட்டத்தில் பெய்து வரும் அதி தீவிர கனமழை காரணமாக, மேப்பாடி மற்றும் கல்லாடி பகுதிகளில் தண்ணீர் பெருக்கெடுத்து ஓடுவதால் ஆங்காங்கே நிலச்சரிவு ஏற்பட்டுள்ளது. மலப்புரம் வயநாடு ஆகிய மாவட்டங்களை இணைக்கும் அதி நவீன சுரங்கப்பாதை கட்டுமானப் பணிகள் நடைபெறும் இடத்தில் மிகப்பெரிய நிலச்சரிவு ஏற்பட்டது. அப்போது பணியில் ஈடுபட்டிருந்த தொழிலா ளர்கள் பலர் மண்ணுக்குள் புதைந்தனர். கனமழை காரணமாக இடுக்கி மாவட்டத்தில், கொச்சி தனுஷ்கோடி தேசிய நெடுஞ்சாலையில் வாகனங்கள் செல்லவும் தடை விதிக்கப்பட்டுள்ளது. மூணாறு பகுதிக்கு செல்வதை தவிர்க்குமாறு, சுற்றுலா பயணிகளுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

---

## மெரினாவில் மண்ணில் புதைந்த மரப்பாதை!

# அரசு உரிய கவனம் எடுத்து சரி செய்ய வேண்டும்!

## கழக மாற்றுத்திறனாளி அணி செயலாளர் பேராசிரியர் தீபக் நாதன் வலியுறுத்தல்!

சென்னை, ஜூலை 9 –

மெரினாவில் மாற்றுத் திறனாளிகளுக்காக அமைக்கப்பட்ட மரப்பாதை பராமரிப்பு இல்லாமல் மண்ணில் புதைந்ததாக செய்தி வந்துள்ளது. இதன்மீது அரசு உரிய கவனம் செலுத்தி சரி செய்ய வேண்டும் என்று கழக மாற்றுத் திறனாளி அணி செயலாளர் பேராசிரியர் தீபக் நாதன் வலியுறுத்தியுள்ளார்.

கழக மாற்றுத் திறனாளி அணி செயலாளர் பேராசிரியர் தீபக் நாதன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:–

காலம் காலமாக இயற்கையின் சுவடு அனுபவிக்காமல் இருந்த ஒரு சமூகத்திற்கு கடல் அலைகளின் ஸ்பரிசம் பெற உதவிய இந்த அற்புதமான முன்னெடுப்பு இப்படி மண்ணில் புதைவதை பார்த்துக் கொண்டு இருக்கவே முடியாது!

கடலும் கடல் அழகும் வானமும் வையகமும் எங்கள் மாற்றுத் திறனாளி தோழர்களுக்கும் சமம் என்பதை இந்த அரசு அறியுமா?

கடைநிலையில் இருப்பவருக்கு கடைத்தேற்றம் அளிக்கும் சமூகநீதி இந்த அரசில் காணாமல் போய்விட்டதோ என்கிற ஐயம் எழும்புகிறது!

மாற்றுத்திறனாளிகள் உரிமை சட்டம் 2016 கீழ் இவைகளை சரியாகப் பராமரிப்பது அரசின் கடமை.

மாற்றுத்திறனாளி ஒருவருக்கு சமூக, கலாச்சார, அரசியல், பொருளாதார, விஷயங்களானவை, தனித்துவப்படுத்துவதாலோ (Distinction) நிராகரிப்பதாலோ (Rejection) அல்லது வெளியேற்றுவதாலும் (Exclusion) கிடைக்க முடியாமல் அவன் மனித உரிமை பாதிக்குமே ஆனால் அது பாகுபாடு (Discrimination) என்று ஆழமான வரையறையை கொடுத்திருக்கிறது. இந்நிலையில் ஒரு மாற்றுத்திறனாளி வெகுஜன மனிதரோடு பயணிக்கின்ற சூழ லில் தடை ஏற்படுமாயின், அதற்கான பிரத்தியேக சில முன்னெடுப்புகளை (Reasonable accommodation) எடுக்காமல் இருந்தால் அதுவும் பாகுபாடு என்று பாகுபாட்டை விஸ்தரிப்பு செய்து உரிமை குரலாக எழுப்பி இருக்கிறது எங்களது சட்டம்.

இதை இங்கே ஆழமாக பதிவதற்கான காரணம் இதன் மீது இந்த அரசு உரிய கவனம் எடுத்து உடனடியாக இதை சரி செய்ய வேண்டும். இதை பராமரிப்போர் யாராக இருந்தாலும் சரியாக பராமரிக்க வேண்டும் என்ற உரிமைக் குரலாக இங்கே பதிவு செய்வதற்காக தான் என்பதை எம் அன்பு தோழர்களுக்கும் தமிழக அரசுக்கும் தெரிவிப்பதற்கேயாகும்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.



திரு.வி.க.நகர் வடக்கு பகுதி கழக துணைச்செயலாளர் புல்லட் ரமேஷ் அவர்களின் இல்ல திருமண வரவேற்பு விழாவில் கழக துணை அமைப்பு செயலாளர் வழக்கறிஞர் ப.தாயகம்கவி கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்தினார். இதில் மாமன்ற உறுப்பினர் வழக்கறிஞர் மு.சரவணன், பகுதி அவைத்தலைவர் தில்லைக்கதிரவன்,மாவட்ட தகவல் தொழில் நுட்ப துணை அமைப்பாளர் சிவகுமார், மாவட்ட பிரிதிநிதிகள் முகவை அண்ணாதுரை, ஆட்டோராஜி, 71–வது வட்ட துணை செயலாளர் பாலாஜி பகுதி பிரிதிநிதி துரை.பிரகாசம். 73–வது வட்ட துணைச்செயலாளர் சுரேன், பெரம்பூர் தம்பையா ஆகியோர் உடனிருந்தனர்.

---

# பேராசிரியர் முனைவர் சு.கிருஷ்ணசாமி இல்லத் திருமண வரவேற்பு!

## கழகப் பொருளாளர் டி.ஆர். பாலு எம்.பி. – கழக துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி. பங்கேற்பு!

சென்னை, ஜூலை 9 -

கழக செயல்பாட்டாளரும், திராவிட இயக்க ஆய்வாளரும், தமிழ்நாடு அரசு உயர்கல்வி மன்றத்தின் முன்னாள் உறுப்பினர் செயலருமான பேராசிரியர் முனைவர் சு.கிருஷ்ணசாமி, திருமதி. க.புவனேஸ்வரி இளநிலை நிர்வாக அலுவலர் (ஓய்வு), சுகாதாரத்துறை, தமிழ்நாடு அரசு தம்பதியினரின் மகன் கி.பரத் சூர்யா - க.மனோசித்ரா இவர்களின் திருமண வரவேற்பு 04.07.2026 சனிக்கிழமை அன்று மாலை சென்னை மதுரவாயலில் உள்ள எஸ்.பி.பி. கார்டன் திருமண அரங்கில் கழகத் தலைவர் அவர்களின் நல்வாழ்த்துக்களுடன், கழக பொருளாளர், முன்னாள் ஒன்றிய அமைச்சர், டி.ஆர். பாலு எம்.பி. அவர்கள் தலைமையில் நடைபெற்றது.



இந்த திருமண வரவேற்பில் கழக துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி. அவர்கள் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்தினார்கள்.

முன்னாள் ஒன்றிய அமைச்சர் வேங்கடபதி, தமிழ்நாடு அரசு முன்னாள் அமைச்சர் மா. சுப்பிர மணியன், முன்னாள் அமைச்சர் பி.கே.சேகர் பாபு, முன்னாள் அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா, முன்னாள் அமைச்சர் சா.மு.ஆவடி நாசர், முன்னாள் துணை சபாநாயகர் கு.பிச்சாண்டி, கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி, கழக செய்தி தொடர்பு தலைவர் டி.கே.எஸ். இளங்கோவன், கழக செய்தி தொடர்பு செயலாளர் கான்ஸ்டன்டைன் ரவீந்திரன் எம்.பி., கழக இணை அமைப்புச் செயலாளர் அன்பகம் கலை, துணை அமைப்புச் செயலாளர் தாயகம் கவி, தலைமைக் கழக செய்தி தொடர்பு இணைச் செயலாளர் தமிழன் பிரசன்னா, சட்ட மன்ற முன்னாள் உறுப்பினர்கள் மீ.அ. வைத்தியலிங்கம், இ.கருணாநிதி, கிருஷ்ணசாமி, எம்.கே. மோகன், பரந்தாமன், ஜோசப் சாமுவேல், காரம்பாக்கம் கணபதி மற்றும் அரசு உயர் அதிகாரிகள், கல்வியாளர்கள், தாளாளர்கள், திரை கலைஞர்கள், உறவினர்கள், நண்பர்கள் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்தினார்கள்.

இன்னிசை கச்சேரியுடன் விழா இனிதே நடைபெற்றது.

---

## நகரச் செயலாளர் எஸ்.ஜார்ஜ் ஏற்பாட்டில்

# உதகை கிழக்கு நகரக் கழகம் சார்பில் நலத்திட்ட உதவிகள்!

## கழக துணைப் பொதுச் செயலாளர் ஆ.இராசா எம்.பி. வழங்கினார்!

உதகை, ஜூலை 9-

உதகை கிழக்கு நகரக் கழகம் சார்பில், முத்தமிழ் அறிஞர், தலைவர் கலைஞர் அவர்களின் 103 வது பிறந்த நாளை முன்னிட்டு இளைப்பாறுதல் மையத்தில் உள்ள ஏழை எளியோருக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது.





இதில் உதகை நகரக் கழக செயலாளர் எஸ். ஜார்ஜ் அவர்களின் ஏற்பாட்டின் பேரிலும் தலைமையிலும் நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியில் கழக துணைச் செயலாளரும், நீலகிரி நாடாளுமன்ற உறுப்பினருமான ஆ.இராசா அவர்கள் கலந்து கொண்டு நலத்திட்ட உதவிகள் வழங்கியும், விளையாட்டு வீரர்களுக்கு விளையாட்டு உபகரணங்கள் வழங்கியும் சிறப்புரையாற்றினார்.

இதில் மாவட்ட கழக செயலாளர் கே.எம். ராஜூ, மாவட்ட அவை தலைவர் போஜன், மாவட்டத் துணைச் செயலாளர் ரவிக்குமார், மாவட்ட பொருளாளர் நாசர் அலி, தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் இளங்கோவன், தம்பி இஸ்மாயில் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

இந்நிகழ்ச்சியில் தலைமைச் பொதுக்குழு உறுப்பினர் வாணீஸ்வரி, ஒன்றியச் செயலாளர் ஜெகதீஷ், நகர அவைத் தலைவர் ஜெய கோபி, நகர பொருளாளர் அணில் குமார், மாவட்ட அணிகளின் நிர்வாகிகள் இமயம் சசி, ராஜா, மணி, மஞ்சு குமார், விஜய குமார், செல்வராஜ், மேத்யூஸ், வெங்கடேஷ், ரவி, பழக்கடை முஜி, கவுன்சிலர்கள் செல்வராஜ், விஷ்ணு பிரபு, கீதா, வனிதா, பிரியா, மேரி பிளோரினா, முன்னாள் கவுன்சிலர்கள் புஷ்பராஜ், முருககுமார்,

மற்றும் கழக நிர்வாகிகள் சுரேஷ், நிக்கோலஸ், உமேஷ், சதாசிவம், ரமேஷ், மகேஷ், ஜமீல், சங்கர், செந்தில் குமார், ஆனந்த், அந்தோணி குரூஸ், விஸ்வநாதன், சிவா, டிடோன் ஸ்டீபன், தங்கராஜ், பாபு விஷ்ணுகுமார், சத்யராஜ், வில்லியம், ராஜன், மகளிர் அணி பிருந்தா, ஷர்மிளா, சாந்தி, சாரதா, பியூலா, ஜெயக்குமாரி உள்ளிட்ட தோழர்கள் பலர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.